සමෘද්ධි සංවර්ධන දෙපාර්තමේන්තුව
சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம்
Department of Samurdhi Development

සමාජ සවිබලගැන්වීම් අමාත්‍යාංශය
சமூக வலுவூட்டல் அமைச்சு
MINISTRY OF SOCIAL EMPOWERMENT

මගේ අංකය / எனது இல / My No: DSD/HO/3/ACC/14/Deli/2018
ඔබේ අංකය / உமது இல / Your No: ........................................
දිනය / திகதி / Date: 2018.06.19

மாவட்ட சமுர்த்திப் பணிப்பாளர்கள் / பிரதேச செயலாளர்கள்,

சமுர்த்தி தலைமையக முகாமையாளர்கள் / வலய முகாமையாளர்கள் / மகா சங்க முகாமையாளர்கள்,

சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்.

**சமுர்த்தி நிவாரணத்தின் பொருட்டு தகுதி பெறும் குடும்பத்தினை தெரிவு செய்வதும் செயற்படுத்தும் முறையும்.**

முழு இலங்கையும் உள்ளடங்குகின்ற பிரகாரம் புதிய சமுர்த்திப் பயனாளிக் குடும்பங்கள் 150,000 இற்கான சமுர்த்தி நிவாரணத்தை வழங்குவதற்கு ஏற்கனவே அமைச்சரவையின் அங்கீகாரம் கிடைக்கப்பெற்றுள்ளது.

02. அதன் பிரகாரம் சமுர்த்தி நிவாரணத்தினை விண்ணப்பிக்கும் மாதிரி விண்ணப்பப்படிவம், விண்ணப்பப்படிவத்தில் உள்ளடங்கவேண்டிய விடயங்களுக்குறிய தகவல்கள் அச்சு மற்றும் இலத்திரனியல் ஊடகங்கள் ஊடாக ஏற்கனவே பிரசுரிக்கப்பட்டுள்ளது.

03. மேலும் ஏற்கனவே அறிந்து கொண்டுள்ள மக்கள் பிரிவினர் (தனியாட்கள்) மக்கள் பிரதிநிதிகள், சிவில் அமைப்புக்கள் போன்றவை) பிரிவிப் பொறுப்பு சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், வலயமட்டத்திலான உத்தியோகத்தர்களிடம் விண்ணப்பப்படிவங்களை சமர்ப்பிப்பதாகவும் அறிக்கைகள் கிடைத்துள்ளன.

04. அவ்வாறு எவரேனும் ஒரு நபர், அல்லது ஒரு அமைப்பின் ஊடாக வழங்கப்படுகின்ற விண்ணப்பப்படிவங்கள் ஒவ்வொரு பிரதேச செயளாளர்களினதும் நேரடிக் கண்காணிப்பின் கீழ் தலைமையக முகாமையாளர்களின் பொறுப்பில் பாதுகாப்பாக வைத்துக்கொள்ள வேண்டியதுடன் மேற்சொன்ன விண்ணப்பப்படிவங்களை பொறுப்பேற்றதாக விண்ணப்பதாரிகளுக்கு தேவையாயின் பற்றுச்சீட்டு ஒன்றினையும் வழங்குதல் வேண்டும்.

05. முதலாம் தவணையில் விண்ணப்பப்படிவங்களை கோரும் திகதியானது 2018 ஜூலை 31ம் திகதியுடன் முடிவடையவுள்ளதுடன் இவ்வாறு தங்களிடமுள்ள விண்ணப்பப்படிவங்கள் தொடர்பில் செயற்படவேண்டிய விதம் தொடர்பிலான சகல ஆலோசனைகளும் உள்ளடங்கிய விபரங்களினுடனான சுற்றறிக்கை மிக விரைவில் தங்களுக்கு வழங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். அதுவரையில் இக்கடிதத்தின் மூலம் வழங்கப்பட்டுள்ள ஆலோசனைகளுக்கு ஏற்றதாக நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு வினயமுடன் அறியத்தருகின்றேன்.

ஜே. தடல்லகே.
பணிப்பாளர் தலைமையதிபதி

Translated by: - M.M.M. Jawhar (Translator)


1වන අදියර,4 වන මහල, සෙත්සිරිපාය, බත්තරමුල්ල. /1ம் கட்டம், 4 வது மாடி,செத்சிறிபாய பத்தரமுல்ல /1st Step, 4 th floor, Sethsiripaya Battaramulla

| | අධ්‍යක්ෂ ජනරාල් / பணிப்பாளர் தலைமையதிபதி / Director General | අධ්‍යක්ෂ (පාලන හා ආයතන) / பணிப்பாளர் (நிர்வாகம்/தாபனம்) / Director (Admin & Establishment) | ප්‍රධාන ගණකාධිකාරී / பிரதான கணக்காளர் / Chief Accountant | අධ්‍යක්ෂ (ක්ෂුද්‍ර මූල්‍ය) / பணிப்பாளர் (குறு நிதி ) / Director ( Micro Finance) | කාර්යාලය / அலுவலகம் / Office |
|---|---|---|---|---|---|
| Tel- | 011-2871672/2872202 | 011-2873799 | 011-2869742 | 011-2889003 | 0112872202 |
| Fax - | 011-2889002 | 011-2873996 | 011-2869742 | 011-2887469 | |
| E-mail- | dg@samurdhi.gov.lk | diradmin@samurdhi.gov.lk | finance@samurdhi.gov.lk | Hot Line:0112-885582 | Hot Line: 011- 2887722 |
| | | Hot Line :0112-889007 | | | |